செ.வெ.எண்:08 நாள்:08.09.2017

**கோயம்புத்தூர் மாவட்டத்தில் வீடற்ற ஏழை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்!!!**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் வீடற்ற ஏழை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது.

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள வீடற்ற ஏழை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவசமாக வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் வீடற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இத்திட்டத்தின் பயனை முழுமையாக பெறுவதற்கு தமிழக அரசு செயல் திட்டம் வகுத்துள்ளது.

மேலும் இத்திட்டத்தினை செயல்படுத்தும் நோக்கில் வீடற்ற ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் பொருட்டு அரசு நிர்ணியிக்கும் விலைக்கு நிலத்தை தர முன்வரும் நில உரிமையாளர்கள் மற்றும் இலவச வீட்டுமனைப்பட்டா கோரும் ஆதிதிராவிட இன மக்கள் நேரடியாக கோயம்புத்தூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரை நேரில் அணுகுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**